
உ
சிவமயம்

# சிவபூமி

மாதாந்த செய்திப் பத்திரிகை
Monthly Journal of Sivapoomi

சிவம்~06 விசுவாசுவ வருடம் ஆவணித் திங்கள் ஆவணி ~2025 பூமி~08




## கல்வியால் ஈழத் தமிழர்களை காப்பாற்ற ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்

மாணவர்கள் குறைந்த பாடசாலைகளை மூடுவது என்பது மிகவும் மன வருத்தத்துக்குரியது.

ஊர் தோறும் மக்களின் உயர்வுக்காக பிடியரிசி எடுத்தும், தமது உடமைகளை காணிக்கையாக்கியும் மிகவும் கஷ்டப்பட்டு உருவாக்கப்பட்ட பாடசாலைகள் மாணவர் குறைவு காரணமாக

மூடப்படுவது பற்றிய செய்தி மிகவும் வேதனையை அளிக்கிறது. 50 மாணவர்களுக்கு உட்பட்ட பாடசாலைகள் அவசியமாக மூடப்படுவது பற்றி இலங்கையின் பிரதம மந்திரி பகிரங்கமாக அறிவித்திருக்கிறார்கள். இலங்கையில் சனத்தொகை வளர்ச்சி வேகம் குறைந்திருப்பது வடக்கு கிழக்கில் மட்டுமல்ல இலங்கை முழுவதிலும் தான். எனினும் வடக்கு கிழக்கில் சனத்தொகை வீதம் மிகவும் குறைந்து கொண்டு செல்கின்றது. இதனால் அதிகமான பாடசாலைகள் வடக்கில் மூடும் நிலையில் உள்ளது. இது பரிதாபத்திற்குரியது.

பல ஆரம்ப பாடசாலைகள் தொடர்ந்து மூடப்பட்டு வருகின்றது. ஆனால் முதல் தர பாடசாலைகளாக இருந்த பாடசாலைகளும் இப்பொழுது மூடும் நிலையில் உள்ளது. உதாரணமாக கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி விடுதிச்சாலையோடு ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்களோடு இருந்த பாடசாலை தற்போது 250 மாணவர்கள் மட்டும் கற்கும் பாடசாலையாக உள்ளது. இதேபோல் வடக்கில் பல 1யுடீ பாடசாலைகள் கூட மாணவர்களின் எண்ணிக்கை என்றும் இல்லாதவாறு குறைந்து கொண்டு செல்கின்றது. இந்த சூழ்நிலை தொடருமானால் பாடசாலைகளுக்கு மூடு விழா ஏற்படுமானால் எமது எதிர்கால நிலை என்னவாகும் என்பது கேள்விக்குறி.

குறிப்பாக இன்று நகரப்புற பாடசாலைகளை நோக்கி மாணவர்கள் செல்வதாக கூறுகிறார்கள். என்றாலும் க.பொ.த உயர்தர பரீட்சையை மூன்று தடவைகள் ஒரு மாணவர் பரீட்சையை சந்தித்து சித்தி பெற்று பல்கலைக்கழகம் செல்லலாம் என்பது இலங்கையினுடைய கல்வி நியதியாகும். ஆனால் அதிகமான வடக்கு உயர்தர வகுப்பு மாணவர்கள் ஒரு தடவைக்கு மேல் பயிற்சியை எடுப்பதாக இல்லை. மூன்றாவது தடவை உயர்தர பரீட்சை எடுக்கும் மாணவர்கள் மிக மிக குறைந்து விட்டார்கள் இதனால் இலங்கையில் உள்ள 18 பல்கலைக்கழகங்களிலும் தமிழ் மாணவர்களுடைய தொகை என்றுமில்லாதவாறு வீழ்ச்சி கண்டுள்ளது.

இன்று வடக்கில் உள்ள இரண்டு பல்கலைக்கழகத்திற்குமே தமிழ் மாணவர்களுடைய தொகை குறைந்து வருவதை கல்வியாளர்கள் எண்ணி கவலை அடைகின்றார்கள். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானம், பொறியியல்,தாதியியல் பீடங்களுக்கு தமிழ் மாணவர்களுடைய தொகை மிக மிக குறைவடைந்து செல்கின்றது. அதனால் வடக்கில் உள்ள

ஆசிரியர்
கலாநிதி. செஞ்சொற்செல்வர்
ஆறு. திருமுருகன்

உதவி ஆசிரியர்
திரு. ச. சந்தோஷன்

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தை நிரப்ப தென்னிலங்கை மாணவர்களே கை கொடுக்கின்றார்கள். தென்னிலங்கை மாணவர்கள் யாழ்ப்பாணத்தில் படிப்பதற்கு விரும்புகின்றார்கள். ஆனால் வடக்கு மாணவர்கள் இரண்டாவது மூன்றாவது உயர்தர பரீட்சையை எடுத்து பல்கலைக்கழகம் செல்ல வேண்டும் என்ற ஆர்வம் என்றும் இல்லாதவாறு குறைவடைந்து செல்கிறது.

எனவே கல்வியில் சிறந்த தமிழர்கள் என்று போற்றப்பட்ட நாம் இன்று எல்லா நிலையிலும் கல்வியில் பின்னோக்கி செல்லுகின்றோம். ஈழத் தமிழர்களின் இயல்பை ஒத்ததாக பல சான்றோர்கள் பல்வேறு விதமான ஆய்வுகளை செய்த போதிலும் முந்தைய நிலைக்குரிய ஆய்வுகள் சரியாக செய்யப்படவில்லை. இன்று நாம் உயர்தர பரீட்சையில் நகரப்புற பாடசாலைகள் தேசிய பாடசாலைகளின் பெறுபேறுகளை கண்டு பூரிப்படைந்திருக்கிறோம் ஆனால் ஏனைய கிராமங்களில் உள்ள உயர்தர வகுப்புக்களுடைய பெறுபேறுகள் என்றும் இல்லாதவாறு வீழ்ச்சி அடைந்த செல்வது பற்றி அதிகளவு நாம் சிந்திப்பதில்லை.

எனவே பாடசாலைகளை மூடு விடலாம் என்ற செய்தி தொடர்ந்து கொண்டே செல்கின்றது. கடந்த சில ஆண்டுகளிலே வடக்கில் பல பாடசாலைகள் மூடப்பட்டுள்ளது. தற்போது மூடும் தருவாயில் உள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை அதிகமாக காணப்படுகின்றது. எனவே இந்த விடயம் தொடர்பாக தேசியம், தேசப்பற்று, நம் இனம், நம்மண் என்ற வாதப்பிரதிவாதங்களை செய்பவர்கள் முதலில் கல்வியால் இந்த இனத்தை காப்பாற்ற முன் வர வேண்டும். அதற்கு ஒன்று பட்டு உழைக்க வேண்டும்.

கலாநிதி செஞ்சொற்செல்வர்
ஆறு.திருமுருகன்

# டென்மார்க் சாலைகள் வடிவமைப்பில் புரட்சிகரமான கண்டுபிடிப்பை நிகழ்த்திய ஈழத்துப் பெண்



காலநிலைய மாற்றத்தால் அதிக மழை மற்றும் வெள்ளம் அதிகரிக்கும் நிலையில் Road (சாலைகள்) தயார் தானா? அடுத்த 50 ஆண்டுகளில் பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள் வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்படுமென்று மாதிரிக் காலநிலை மாற்ற அறிக்கை (IPCC – காலநிலை குழு) எச்சரிக்கிறது. இந்த சூழ்நிலையில், நம்முடைய Road (சாலைகள்) வெறும் போக்குவரத்தை மட்டும் எதிர்கொள்ளாமல், அதிக மழையை மற்றும் வெள்ளத்தையும் சமாளிக்கக் கூடியதாக இருக்க வேண்டும். Permeable pavements என்ற வகை Road surface இதற்கு ஒரு சிறந்த தீர்வாக அமைகிறது. இவை மேற்பரப்பில் விழும் நீரை உறிஞ்சி, கீழே உள்ள subbase பகுதியில் சேமித்து, மெதுவாக வெளியேறச் செய்யும் drainage system போல் செயல்படுகின்றன. இந்த ஆய்வு, டென்மார்க் நாட்டில் வசிக்கும் டென்ஷனி வசந்தன் ராஜரத்தினம் முத்துவேலு. என்ற பெண் பிள்ளையால் PhD ஆய்வு
(research ) திட்டமாக நடத்தப்பட்டது.

இதில் literature review,stakeholder interviews மற்றும் field studies ஆகியவை இடம்பெற்றுள்ளன. இந்த ஆய்வு permeable pavements-இன் load-bearing capacity, நீர் சேமிப்பு திறன் மற்றும் freeze-thaw cycles-ஐ எதிர்கொள்ளும் திறனை மதிப்பாய்வு செய்கிறது. இந்த முக்கியமான அறிவுக் கேள்வி அதாவது, moisture permeable subbase-இன் structural behavior-ஐ எவ்வாறு பாதிக்கிறது என்பதில் இன்னும் தெளிவான புரிதல் தேவை. தொழில்துறையில், இவற்றை பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு பல தடைகள் உள்ளன. Standardized guidelines இல்லாமை, அனுபவக்குறைவு, மற்றும் maintenance பொறுப்புகள் தெளிவாக இல்லாமை முக்கிய காரணங்களாகும். Infiltration capacity பல காரணிகளால் மாறுபடுகிறது – pavement-இன் porosity மேற்பரப்பின்

நிலை மற்றும் கட்டுமான முறைகள் ஆகியவை இதற்கு பாதிப்பை உண்டு செய்கின்றன. நீண்டகால செயல்திறனை உறுதி செய்ய, முறைபூர்வமான maintenance அவசியமாகும். கட்டமைப்பு திறனில், permeable pavements நல்ல bearing capacity-ஐ வழங்குகின்றன. அவை seasonal variations காரணமாக பெரிதாக பாதிக்கப்படவில்லை. மேலும், இந்த ஆய்வில் உருவாக்கப்பட்ட validated freeze-thaw model, pavement modelling tools-இல் உடனடியாக இணைக்கக்கூடியதாக உள்ளது. முடிவில், permeable pavements குறித்த இந்த ஆய்வு, அறிவியல் மற்றும் நடைமுறை சவால்களை தீர்க்கும் வகையில் முக்கியமான தகவல்களை வழங்குகிறது.

இந்த கண்டுபிடிப்பு வழி முறைகளை ஒழுங்கான முறையில் கடைப்பிடித்தால் Road (சாலைத்) துறையில் நிலைத்த முன்னேற்றத்துக்கு இந்த செயல் முறை வழிகாட்டும். இதற்காக, ஆராய்ச்சியாளர்கள், தொழில்துறை நிபுணர்கள், மற்றும் கொள்கை அமைப்பாளர்கள் இணைந்து செயல்பட வேண்டும். எதிர்கால ஆய்வுகள், இப்போது உருவாக்கப்பட்ட freeze-thaw model-ஐ மேலதிக சோதனைகளுடன் ஒருங்கிணைப்பதன் மூலம், மேலும் பயனுள்ளதாக இருக்கும். இந்த கண்டுபிடிப்புகள், 0°C கீழ் வெப்பநிலை ஏற்படும் நாடுகளில் பயன்படுத்தக்கூடியவையாக உள்ளது. டென்ஷனி அவர்களின் அரும் பெரும் ஆராட்சிக்கண்டுபிடிப்பால் பற் பல நாடுகள் நன்மை பெற அதிக சந்தர்ப்பங்களும், வாய்ப்புக்களும் அமைந்துள்ளன.

டென்மார்க்கில் உள்ள ஒல்போ (Denmark, Aalborg) என்ற University யில் இக் கண்டுபிடிப்பு மிகப்பெரிய ஆராட்சி சாதனையாக கருதப்படுகின்றது. டென்‘னி வசந்தன் ராஜரத்தினம் முத்துவேலு, B.Sc, M.Sc Civil Engineer & PhD Researcher என்கின்ற ஈழத்து தமிழ்ப் பெண் ஒருவரே இந்த உயரிய ஆராய்ச்சியை செய்தவராவார். தந்தை பெயர்: வசந்தன் ராஜரத்தினம் முத்துவேலு தாய் பெயர்: உமா வசந்தன் Paralai Road, Chulipuram பறாளாய் வீதி, சுழிபுரம். கடல் கடந்து வாழ்ந்தாலும் இவர்களால் ஈழத்து தமிழ் மண்ணும் மக்களும் பெருமை அடைகின்றனர்.

# நினைவுப் பிரார்த்தனை



குப்பிழான் சிவபூமி ஞான ஆச்சிரமத்தில் கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேல் நிர்வாகியாக பணியாற்றிய சுதுமலை அமரர் .சோமசுந்தரம் ஸ்ரீதரன் அவர்களின் மறைவு குறித்து, நடைபெறும் நினைவு பிராத்தனை 02.08.2025 அன்று காலை 10.00 மணிக்கு சிவபூமி அறக்கட்டளை தலைவர் ஆறு திருமுருகன் ஐயா தலைமையில் நடைபெற்றது.

சிவபூமி அறக்கட்டளையின் வளர்ச்சியிலும் பணிகளிலும் அன்னாரின் அர்ப்பணிப்பான செயற்பாடுகள் காலத்தால் என்றும் நினைவில் வைத்திருக்கப்படும்.





# தேசிய மட்ட சம்பியனாகியது யாழ் இந்து மேசைப்பந்தாட்ட அணி



11, 12.07.2025 ஆகிய திகதிகளில் பண்டாரகமவில் நடைபெற்ற அகில இலங்கை ரீதியான மேசைப்பந்தாட்ட போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி 18 வயதிற்குட்பட்ட அணி அரையிறுதி போட்டியில் கொழும்பு றோயல் கல்லூரியுடன் மோதி வெற்றி பெற்று இறுதிப் போட்டியில் அளுத்கம வித்தியாலயவுடன் மோதி வெற்றி பெற்று C பிரிவில் முதலாம் இடத்தை பெற்று B பிரிவுக்கு முன்னேறியுள்ளது. இந்த சாதனைக்கு காரணமான யாவரையும் சாதனையாளர்களையும் பல வெற்றிகள் மேலும் பெற மனமார வாழ்த்துகிறோம்.




# கம்பவாரிதி அவர்களுக்கு இயற்றமிழ் அறிஞர் விருது



சென்னை கம்பன் கழகத்தின் பொன்விழா ஆண்டின் சிறப்பு விருதான "இயற்றமிழ் அறிஞர்" விருதினை தமிழக முதலமைச்சரிடம் இருந்து பெற்றுக்கொண்ட கம்பவாரிதி ஜெயராஜ் அவர்களுக்கு வாழ்த்துகள். இந்திய அறிஞர்களுக்கு மத்தியில் இவ் விருதினைப்பெறுகின்ற ஒரே ஒரு இலங்கைத் தமிழர் இவர் என்பது சிறப்பிற்குரியது.

# இதய அஞ்சலி



லண்டன் சைவமுன்நேற்றச் சங்கத்தின் காவலர் வழக்கறிஞர் கு.சிதம்பரப்பிள்ளை ஐயா அவர்களின் பிரிவு குறித்து மிகுந்த கவலை அடைகிறோம். புலம்பெயர்ந்த தேசத்தில் சைவ சமயத்திற்காக ஐயா அவர்கள் ஆற்றிய பணிகள் என்றும் மனங்களில் மறையாமல் இருக்கும். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிய வேண்டும்.

# செம்மணிப் புதைகுழி தொடர்பில் சர்வதேச விசாரணை அவசியம்! கலாநிதி ஆறு.திருமுருகன் கோரிக்கை.



செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் சர்வதேச விசாரணை அவசியம் என அகில இலங்கை இந்துமாமன்றத்தின் உப தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

செம்மணிப் புதைகுழி தொடர்பில் அவர் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

இலங்கைத் தமிழ் மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கும் செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதியான தீர்வு வேண்டும். குழந்தைகள் முதல் எத்தனை அப்பாவிகளைக் கொடூரமாகக் கொலைசெய்து மண்ணுக்குள் புதைத்த கொடிய செயலை யாம் வன்மையாக கண்டிக்கிறோம். இலங்கையில் இரக்கமின்றி தமிழ் மக்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டார்கள் என்பதற்கு செம்மணிப் புதைகுழி முக்கிய ஆதாரமாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.


போர் முடிந்தாலும் உறவுகளின் இழப்புகளினால் மிகுந்த கவலையோடு வாழும் உறவினர்களுக்கு செம்மணி விவகாரம் மேலும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. செம்மணிப் புதைகுழி ஆராய்ச்சி தொடர்பாக ஈடுபடுகின்ற அனைவருக்கும் இவ்வேளையில் நன்றி கூறுவதோடு நீதியான விசாரணை தொடர்ந்து இடம்பெற வேண்டும். இலங்கையில் உள்ள மனிதாபிமான அமைப்புகள் யாவும் இவ்விடயத்தில் அக்கறை கொள்ள வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபை இவ்விடயத்தில் நேரடியாகப் பங்குகொள்ள வேண்டும். இலங்கை அரசாங்கம் செம்மணி விவகாரம் தொடர்பாக

நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும். புதைகுழிகளில் விளையாட்டுப் பொம்மையும் பால் பருக்கும் போத்தலும் பச்சிளம் பாலகர்களின் எலும்புக் கூடுகளோடு உலகுக்குச் சொல்லும் செய்தியைச் சகலரும் உணர வேண்டும்.

காலம் கடந்தாலும் இயற்கை, இறைவன் , புதைகுழிகள் ஊடாக உண்மையை வெளிப்படுத்தியுள்ளமை “தர்மம் தோற்காது” என்ற நம்பிக்கையைத் தருகிறது. கட்சி பேதமின்றி தமிழர்கள் ஒன்றுபட்டு இவ்விவகாரத்துக்கு நீதி கிடைக்க முயற்சி செய்ய வேண்டும் என்று அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நல்லூரை உயிராய் நேசித்த உத்தமர்களை நீள நினைந்து வணங்குகிறோம்



நல்லூர் கந்தசாமி கோவிலை நாளும் பொழுதும் உயிராய் நேசித்த அறங்காவலர் அமரர்கள் .குகஸ்ரீ.குமாரதாஸ் மாப்பாண முதலியார் தம்பதிகள் என்றும் மரியாதைக்குரியவர்கள். நல்லூரான் உற்சவம் நடைபெறும் வேளையில் அவர்கள் ஆற்றிய ஆன்மீக பணிகளை நீள நினைந்து நன்றி கூறுவோம்.



# இசைத்துறையில் சாதிக்கும் சிவபூமி மனவிருத்தி பாடசாலையின் மாணவர்கள்

சிவபூமி மனவிருத்திப் பாடாலையின் தெய்வக் குழந்தைகள் தேசிய மட்ட இசைத்துறைப் போட்டியில் பங்குபற்றுவதற்கான தகுதியினைப் பெற்றுள்ளார்கள். சிவபூமி அறக்கட்டளையின் கீழ் இயங்கும் கிளிநொச்சி மனவிருத்திப் பாடாலையில் கல்வி கற்கும் தெய்வக்குழந்தைகள், தங்களது திறமைகளை மிகவும் சிறப்பாக வெளிப்படுத்தி தற்பொழுது தேசிய மட்ட இசைத் துறைப் போட்டியில் பங்குபற்றுவதற்கான தகுதியினைப் பெற்றுள்ளார்கள்.

தெய்வக் குழந்தைகள் அனைவரும் தேசிய மட்டத்திலும் வெற்றி பெற்று தங்களின் சாதனைகளை நிலை நாட்ட எமது பாராட்டுக்களையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதுடன், மேலும் பல சாதனைகளை தங்கள் வாழ்வில் பெற்றுக் கொள்ள எல்லாம் வல்ல எங்கள் ஈஸ்வரியாம் தெல்லி நகர் அன்னையை மனதார வேண்டி நிற்கின்றோம்.



# இனிய வாழ்த்துக்கள் பேராசிரியர் எஸ்.குமரன்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத்துறையின் தலைவரும் சிரேஸ்ட விரிவுரையாளருமான சமுதாயமருத்துவ நிபுணர் வைத்தியகலாநிதி.எஸ்.குமரன் திறமை அடிப்படையில் பேராசிரியராக பதவியுயர்வுபெற்றுள்ளார்.

மருத்துவ பீடத்தில் 2010ஆம் ஆண்டு சிரேஸ்ட விரிவுரையாளராக இணைந்து கொண்ட இவர் மருத்துவபீடம் மூலமாக பல்வேறு சமுதாய மருத்துவ பணிகளின் முன்னோடியாக திகழ்கின்றார். சமூக மட்டத்தில் மருத்துவ சேவையைக் கொண்டு சேர்ப்பதில் தனித்துவமான திறமையைக் காண்பிக்கும் இவர் கற்பித்தல் பணிகளுடன் சிகிச்சையியல் பணிகளையும் சமாந்தலமாக மேற்கொள்ளும் சமுதாய மருத்துவ நிபுணர்களுள் ஒருவராவார்.
பேராசிரியர் அவர்களுக்கு இனிய வாழ்த்துக்கள்

# இனிய வாழ்த்துக்கள்
# பேராசிரியர் சி.கோபிசங்கர்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட சத்திரசிகிச்சைத் துறை சிரேஸ்ட விரிவுரையாளர் சத்திரசிகிச்சை வைத்தியநிபுணர் வைத்தியகலாநிதி சி.கோபிசங்கர் திறமை அடிப்படையில் பேராசிரியராக பதவியுயர்வுபெற்றுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் சத்திரசிகிச்சைத் துறையில் 2009ஆம் ஆண்டு விரிவுரையாளராக இணைந்து கொண்ட இவர் சத்திரசிகிச்சை துறையின் தலைவராகவும் கடமையாற்றியுள்ளார். யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவரான இவர் பாடசாலை நாள்களில் சிறந்த விளையாட்டு வீரராகவும் திகழ்ந்தவர்.

சர்வதேச அங்கீகாரங்கள் பலவற்றைக் கொண்ட யாழ்ப்பாணத்தின் சிறப்பு மிகு பொதுச் சத்திரசிகிச்சை நிபுணர்களுள் ஒருவரான இவர் பேராசிரியர் தகமை பெற்றமை சிறப்புக்குரியது. இனிய வாழ்த்துக்கள்.

# இனிய வாழ்த்துக்கள்
# பேராசிரியர் ஆ.முருகானந்தன்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட ஒட்டுண்ணியியல் துறை சிரேஸ்ட விரிவுரையாளர் வைத்தியகலாநிதி. ஆ.முருகானந்தன் திறமை அடிப்படையில் பேராசிரியராக பதவியுயர்வு பெற்றுள்ளார். குறிப்பாக ஆய்வுப் பின்புல ஆற்றல் மற்றும் திறமை என்பவற்றின் அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கான தகமையை அவர் பெற்றுக்கொண்டுள்ளமை தனித்துவமான அம்சமாகும்.

பேராசிரியர் முருகானந்தன் 2004ஆம் ஆண்டு தொடக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்தவபீடத்தின் விரிவுரையாளராக கடமையாற்றி வருவதுடன் நோய் நிர்ணயியல் (Department of Pathology) மற்றும் ஒட்டுண்ணியியல் துறைகளின் (Department of Parasitology) தலைவராகவும் பணியாற்றியவர்.

மருத்துவபீடத்தில் 2012-2017 காலப்பகுதிகளில் உதவிப் பதிவாளராக கடமையாற்றிய காலப்பகுதிகளில் எனது அவதானிப்பின் அடிப்படையில் மருத்துவபீடத்தின் பௌதிகவள மேம்பாட்டுக்கு துறைசார் பங்களிப்பை வழங்கியவர் என்பதும் நினைவுக்கு வருகின்றது. எல்லாவற்றுக்கும் மேலாக 2022 ஏற்பட்ட கோவிட் 19 பெரும் தொற்றின் போது PCR சோதனைகளை பெரும் நெருக்கடிகளுக்கு மத்தியில் நின்று முன்னெடுத்த அர்ப்பணிப்பு காலத்தால் என்றும் நினைவு கூரப்படும். இனிய வாழ்த்துக்கள் பேராசிரியர் முருகானந்தன்.

# மகத்துவமான குருத்துவப் பணி புரியும் ஆசிரியர் குணசீலன் யாழ் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்



யாழ்ப்பாணம் மாநகரசபை சைவசமய விவகாரக் குழு நல்லூர் மஹோற்சவ காலத்தில் வெளியிடுகின்ற நல்லைக்குமரன் மலர் - 2025 வெளியீட்டு விழாவும் யாழ்.விருது வழங்கும் நிகழ்வும் இன்று 06.08.2025 புதன்கிழமை காலை 9.00 மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் இடம்பெற்றது.

யாழ்.மாநகர ஆணையாளர் ச.கிருஸ்னேந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி வி.மதிவதனியும், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கை.சிவகரனும் கலந்து கொண்டனர்.

ஆசியுரையினை சிவசிறி சபா.வாசுதேவக்குருக்கள், செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் ஆகியோர் நிகழ்த்தினர்.



நூல் வெளியீட்டுரையை கோ. கோகுலறதனும், ஆய்வுரையை யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் திருமதி கோசலை மதனும் நிகழ்த்தினர்.

யாழ்ப்பாண மாநகர சபையின் சைவ சமய விவகாரக் குழு ஆண்டு தோறும் வழங்கி வரும் உயரிய யாழ் விருதை உயிரியல் ஆசான் சின்னத்தம்பி குணசீலன் அவர்களுக்கு வழங்கிக் கௌரவித்தமை சமூக மட்டத்தில்



பெரும் மகிழ்வையும் நிறைவையும் ஏற்படுத்தியுள்ளது.

மக்கள் பணி செய்கின்ற மேன்மையாளர்களைக் கௌரவிக்கும் முகமாக யாழ்ப்பாண மாநகரசபையின் சைவ சமய விவகாரக் குழு ஆண்டு தோறும் யாழ் விருதை வழங்கி கௌரவித்து வருகிறது.

இதனடிப்படையில் 2025 ஆம் ஆண்டுக்கான விருது, உயிரியல் ஆசான் சின்னத்தம்பி குணசீலன் அவர்களுக்கு வழங்குவதென யாழ்ப்பாணம் மாநகர சபையின் சைவ சமய விவகாரக் குழு ஏக மனதாக தீர்மானித்து அதனை இன்றைய தினம் வழங்கியுள்ளது.

சைவ சமய விவகாரக் குழு சமய, சமூக, மருத்துவப் பணிகளுக்காக புலமை சார்ந்தவர்களுக்கு ஏலவே யாழ் விருதை வழங்கியிருந்தாலும் கல்வித்துறையை சிறப்பித்து வழங்கப்பட்ட முதலாவது யாழ் விருது இதுவென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

நம் மண்ணில் இருந்து மாணவர்களின் கல்விக்காக மிக நீண்ட காலம் பெரும் பணியாற்றி வரும் உயிரியல் ஆசான் சின்னத்தம்பி குணசீலன் அவர்கள் வடமராட்சி கரவெட்டியைச் சேர்ந்த சின்னத்தம்பி - சிவகாமி தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார். தனது தாயார் கற்பித்த உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியையும் நெல்லியடி மகா வித்தியாலயத்தில் இடை நிலை, உயர்தரக் கல்வியையும் கற்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் திற்குத் தெரிவானார்.



விஞ்ஞானப் பட்டப் படிப்பை வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியில் நிறைவு செய்த அவர் பருத்தித்துறை மெதடிஸ்த மிசன் உயர்தரப் பெண்கள் பாடசாலையில் ஆசிரியராக சிறிது காலம் பணியாற்றினார்.



பின்னர் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விஞ்ஞானத்துறை விரிவுரையாளராகப் பதவியேற்றார். அதேவேளை உயிரியல் பாடத்தை தனியார் கல்வி நிறுவனங்கள் மூலம் மாணவர்களுக்குக் கற்பித்தார்.

ஆசான் குணசீலன் அவர்கள் எங்கள் மருத்துவ பீட மாணவர்களையும் விஞ்ஞானத்துறை மாணவர்களையும் உருவாக்கிய சிற்பி. மாணவர்களின் நன்மதிப்பிற்குரிய அவர், அப்பளுக்கற்ற ஆசான். ஆசிரியத்துவம் எப்படியாக இருக்க வேண்டும் என்பதற்கான அடையாளம் அவர். இன்று, நம் மத்தியிலும் புலம்பெயர் நாடுகளிலும் இருக்கக்கூடிய மருத்துவர்கள் மற்றும் விஞ்ஞானத் துறை சார்ந்தவர்கள் ஆசான் குணசீலனின் மாணவர்கள் என்பது பெருமைக்குரிய விடயமாகும்.

நம் மண்ணில் போர் மேகம் சூழ்ந்த போதிலும் ஆசான் குணசீலன் அவர்கள் எங்கள் மாணவர்களின் கல்விக்காக இம் மண்ணில் இருந்து ஆற்றிய பெரும்பணியை மறந்து விடமுடியாது. அவரின் கல்விப் பணி எங்கள் பெரும் சொத்தாகிய கல்விக்கு எந்தக் குந்தகமும் ஏற்படாமல் பாதுகாத்தது என்பதை நம் தமிழ்ச் சமூகம் ஒருபோதும் மறந்துவிடாது.



மாணவர்கள் மீது அளவு கடந்த அன்பு கொண்ட அவர் மாணவர்களின் குடும்ப நிலைகளைக் கருத்தில் கொண்டு உதவி தேவைப்பட்ட அத்துணை மாணவர்களும் உயர் கல்வி கற்பதற்குப் பேருதவி புரிந்தவர். கற்பிக்கும் ஆற்றல், பண்புடமை,கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, நேர்கொண்ட பார்வை என்ற உயரிய விழுமியங்களைத் தன் வாழ்வின் அணிகலனாகக் கொண்டவர். அவரிடம் கற்றுப் புலம் பெயர் நாடுகளில்


உள்ள மாணவர்கள் அவரை அங்கு வரவழைத்து தங்கள் குருவுக்கு கௌரவம் செய்தனரெனில், அவர் மீது மாணவர்கள் கொண்டிருந்த பற்றும் பாசமும் எத்துணை உயர்வானதென்பதை நாம் உணர முடியும். 2017, 2018, 2019 ஆண்டுகளில் கனடா, இலண்டன், அவுஸ்திரேலியாவுக்கு அழைத்து அவருக்கு விழா எடுத்து அவரது மாணவர்கள் மகிழ்ந்தனர்.

இதற்கும் மேலாக, வடமராட்சி பிரதேச மருத்துவர்கள் நிதிப்பங்களிப்புடன் வைத்தியசாலையில் அமைக்கப் பட்ட வைத்தியர்களின் ஓய்வு அறை மற்றும் ஊழியர்களின் சிற்றூண்டிச்சாலைக் கட்டடத்திற்கான அடிக்கல்லை தங்கள் உயிரியல் ஆசான்களான திரு.சி.குணசீலன், திரு.த.தம்பிராசா ஆகியவர்கள் மூலம் நாட்டிவித்ததுடன் அந்தக் கட்டடத்தினை அவர்கள் மூலம் திறந்து வைத்து அதனைக் கல்லில் பொறித்துக் கட்டடத்தில் பதித்து பெருமையடைந்தனர்.

இவ்வாறாக தனது வாழ்வை குணசீலன் மாணவர் சமூகத்திற்கு அர்ப்பணித்த ஆசான் குணசீலன் அவர்களின் கல்விப்பணி, சமூகப்பணி மற்றும் ஆசிரியத்துவம் ஆகியவற்றிற்கு கௌரவம் அளிக்கும் அங்கீகாரமாக அமையும் யாழ் விருது அவரின் கரங்களில் சேர்ந்ததால் அவ் விருது மேலும் பெருமை பெற்றது.



# பன்றியாகப் பிறந்த குரு



ஒரு குரு நிறைந்த சீடர்களுடன் மிக உயர்ந்த நிலையில் இருந்து வந்தார். ஒரு முறை அவர் தனது மறுபிறப்பின் தன்மையை காண முடிவு செய்து ஒரு நதிக்கரையில் அமர்ந்து தவமேற்கொண்டார். தவத்தின் பயனாக மறுபிறப்பில் தான் ஒரு பன்றியாக பிறப்பெடுப்பதை அறிந்தார், மிக உயர்ந்த நிலையில் உள்ள நாம் முன்வினை காரணமாக இப்படி ஒரு பிறப்பை எடுத்து சில காலம் வாழும் நிலை வந்ததை அறிந்து மிகவும் மனவேதனை அடைந்தார். தனது சீடர்களில் ப்ரியமானவனை அழைத்து தன் நிலையை சொல்லி அவன் கையில் ஒரு வாளைக் கொடுத்து இப்போதே புறப்படு, இன்னும் ஐந்து வருடங்களில் இந்த ஊரில் நான் பன்றியாக பிறந்திருப்பேன், என்னை கண்டவுடன் அந்த பன்றியுருவத்தின் நெற்றியில் என் உருவம் உனக்கு மட்டும் தெரியும் கண்டவுடன் "என்னை வெட்டிவிடு" என்று மிக உருக்கமாக அவனிடம் கேட்டுக்கொண்டார். அதனை கேட்ட சீடனும் சரி என்று சொல்லி புறப்பட்டு போனான்.

கால் நடையாகத்தானே போகவேண்டும், சுற்றி அலைந்து குருநாதர் சொன்ன ஊரை வந்து சேர்ந்தான் சீடன். அந்த ஊரில் உள்ள பன்றிகளை ஒவ்வொன்றாக நெற்றியை பார்த்தவாறே அலைந்தான். ஆனால் அந்த பன்றியை காணவில்லை. அந்த ஊர்க்காரர்களிடம் இங்கே பன்றிகள் எங்கே அதிகம் இருக்கும் என கேட்டான், அவர்கள் அவனை ஒரு மாதிரியாகப் பார்த்துவிட்டு ஊரின் எல்லை தாண்டி ஒரு மலக்குவியல் உள்ள இடம் உண்டு, அங்கே நிறைய இருக்கும் ஆனால் அங்கே போகமுடியாது. துர்நாற்றம் வீசும் என்றார்கள். சரி என்று சொல்லிவிட்டு அந்த இடம் நோக்கி நடந்தான் சீடன். நெருங்கநெருங்கவே இந்த இடம் இருப்பது தெரிந்துவிட்டது சீடனுக்கு. அந்த அளவு துர்நாற்றம். மூக்கை பிடித்துக்கொண்டு குருநாதரை தேடினான்.

ஒரு இடத்தில் மெகாசைஸ் பன்றி ஒன்று தனது குட்டிகளுடன் ஒரு பெரிய மலக்குழியில் படுத்து விளையாடிக் கொண்டிருந்தது. அருகில் சென்று பார்த்தான் அதன் நெற்றியில் குருநாதர் உருவம் தோன்றி மறைந்தது. உடனே வாளை உருவி குருவே என்று கூவியபடி பாய்ந்தான். சடாரென்று திரும்பிய அந்த பன்றி ஒரு நொடியில் அவன் கையை எட்டிப்பிடித்து "சீடா இந்த வாழ்வில் நான் ஆனந்தமாக உள்ளேன் கெடுத்து விடாதே" என்று கெஞ்சியது. விக்கித்து நின்றான் சீடன்

தத்துவம் : எந்த நிலை பிறப்பானாலும் அந்த நிலைக்கு அதன்செயல்கள் சிறப்பே, உயர்வே. அதாவது மனிதனாக இருந்தபோது கேவலமாக இருந்த பன்றிப் பிறப்பு பன்றியாக உள்ளபோது சொர்க்கமாக தெரிகிறது.

# மகசீன் சிறைச்சாலை தமிழ் கைதிகளுக்கு ஆடி அமாவாசை விரத பொருட்கள் வழங்கி வைப்பு

அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் ஆடி அமாவாசை (24-07-2025) நிகழ்வினை முன்னிட்டு பொறலை மகசீன் சிறைச்சாலை தமிழ் கைதிகளுக்கு பூசை மற்றும் அன்னதானப் பொருட்கள் வழங்கப்பட்டது. பல்வேறு ஆண்டுகளாக நீதி வேண்டி சிறைச்சாலையில் பல துன்பங்களோடு வாழும் உறவுகளுக்கு தம் வாழ்வின் முக்கிய கடமையான ஆடி அமாவாசை விரத தினத்தை பக்தி பூர்வமாக அனுஷ்டிக்கும் வகையில் மேற்படி பொருட்கள் கையளிக்கப்பட்டன.






# நல்லூர் கந்தசுவாமி கோயில் 2025 மகோற்சவம் சிறப்பாக நடைபெறுகிறது

யாழ்ப்பாணம், நல்லூர் – வட இலங்கையின் புகழ்பெற்ற நல்லூர் கந்தசுவாமி கோயிலின் வருடாந்த மகோற்சவம் 2025, பாரம்பரியத்தின்படி கொடியேற்றத்துடன் கடந்த வாரம் சிறப்பாக தொடங்கியது. பக்தர்கள் ஆரவாரத்துடன் கலந்து கொண்டு, திருவிழாவின் ஆரம்பத்தைச் சாட்சி செய்தனர்.







மகோற்சவத்தின் போது தினமும் பல்வேறு வாகன ஊர்வலங்கள் நடைபெற்று வருகின்றன. வெள்ளி வாகனங்கள், சிங்க வாகனம், அன்னம் வாகனம் உள்ளிட்ட பாரம்பரிய வாகனங்கள் பக்தர்களை கவர்ந்துள்ளன. தேர் திருவிழா மகோற்சவத்தின் உச்சமாக நடைபெறவுள்ளது. உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பக்தர்கள் ஆயிரக்கணக்கில் கலந்து கொள்ள உள்ளனர். பக்தி, பாரம்பரியம், பண்பாட்டு அழகுகள் ஒருங்கிணையும் நல்லூர் மகோற்சவம், யாழ்ப்பாணத்தின் ஆன்மீகச் செல்வமாகவும், உலகத் தமிழர்களின் பெருமையாகவும் தொடர்ந்து விளங்குகிறது.

















# உணர்வுபூர்வமாக நடைபெற்ற நினைவு நிகழ்வு



கடந்த மே மாத இறுதியில் எம்மை விட்டுப்பிரிந்த யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதரக உத்தியோகத்தர் ச. பிரபாகர சர்மா அவர் மகன் பி. அக்ஷய் சர்மா ஆகியோரது நினைவு நிகழ்வு யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் 10.08.2025 ஞாயிறு காலை இடம்பெற்றது.








இதன் போது அவர்களது நினைவாக கனா என்ற நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது. நூலை கலாநிதி சீதாலட்சுமி பிரபாகரன் வெளியீடு செய்து முதற் பிரதியை இந்தியத் துணைத் தூதர் ஸ்ரீமான் சாயிமுரளி அவர்களிடம் கையளித்தார்.











# கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபராக எஸ்.முரளிதரன் அவர்கள் கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.



கிளிநொச்சி மாவட்டத்திற்கான நிரந்தர அரசாங்க அதிபராக எஸ்.முரளிதரன் அவர்கள் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் 11.08.2025 தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக்கொண்டார்

கிளிநொச்சி மாவட்டத்தின் பதில் அரசாங்க அதிபராக கடமையாற்றி வந்த எஸ்.முரளிதரன் அவர்கள் அமைச்சரவை அனுமதிக்கமைவாக கிளிநொச்சி மாவட்டத்தின் அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டதோடு அவருக்கான நியமனக்கடிதம் கடந்த 5ம் திகதி உத்தியோகபூர்வமாக வழங்கிவைக்கப்பட்டது.



அதற்கமைய கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபராக எஸ். முரளிதரன் அவர்கள் இன்றைய தினம் தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.

இன்று காலை சிவில் அமைப்பினர் மற்றும் சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளால் அரச அதிபர் விடுதியிலிருந்து அரசாங்க அதிபர் அவர்கள் கௌரவத்துடன் கிளிநொச்சி மாவட்டச்செயலகத்திற்கு அழைத்து வரப்பட்டார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபர்(காணி) அவர்களுடன் இணைந்து பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் என பலர் வரவேற்றதோடு அலுவலகத்தில் தனது கடமையினை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக்கொண்டார்.

இலங்கை நிர்வாக சேவை அதிகாரியான இவர் தெல்லிப்பளை, சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலகங்களின் பிரதேச செயலாளராகவும், யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்(காணி), கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராகவும் பின்னர் பதில் அரசாங்க அதிபராகவும் பதவி வகித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆறாவது தமிழியல் ஆய்வு மாநாடு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நடைபெற உள்ளது.




யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சர்வதேச ஆய்வரங்கின் ஒரு பகுதியாகத் தமிழ்த்துறை நடத்தும் ஆறாவது தமிழியல் ஆய்வு மாநாடு - 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ம் திததி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டின் கருப்பொருள் ”தமிழ் மொழி, இலக்கியச் செழுமையில் ஆழ்வார் பாசுரங்கள்” ஆகும்.

கந்தையா கார்த்திகேசன் அறக்கொடை நிதிய அனுசரணையில் இந்த மாநாடு நடத்தப்படுகிறது. உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டில் இருந்தும் பல்வேறு அறிஞர் பெருமக்கள் இந்த நிகழ்வில் பங்குபெற உள்ளார்கள்.

# சிவபூமி முதியோர் இல்லத்தில் சிறப்புரை ஆற்றிய பேராசிரியர் அரங்க இராமலிங்கம்



இந்தியாவின் பேராசிரியர் அரங்க இராமலிங்கம் அவர்கள் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் நடாத்தும் தமிழியல் ஆய்வு மாநாட்டில் கலந்து கொள்ள இலங்கை வந்துள்ளார். அவர் எமது சிவபூமி முதியோர் இல்லத்திற்கு வருகை தந்து முதியோர்களுடன் கலந்துரையாடி அவர்களுக்கு சிறப்புரை ஒன்றையும் ஆற்றியிருந்தார்.

